பக்கங்கள் 6 விலை சதம் 40 ★★

# ஈழநாடு
The EELA NADU

மலர்: 19 சித்திரை 25 ஜ: அவ்: 17 இதழ்: 85
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 7-5-77

## ஆணையாளரை எதிர்பார்த்து ஆயுர்வேத மாணவர் ஏமாற்றம்!
### அழைப்பு அனுப்பியவரும் வரவில்லை!!

யாழ்ப்பாணம், சனி

ஆயுர்வேத ஆணையாளரை சந்திக்க வந்த லங்கா யாழ். ஆயுர்வேத கல்லூரி மாணவ மாணவிகள் பெரும் ஏமாற்றமடைந்தனர்.

கல்லூரி சம்பந்தமாக ஆயுர்வேத ஆணையாளர் எம்மை சந்திக்க விரும்புவதால் தவறாது சமூகம் தரவும் என கல்லூரி நிர்வாகி டாக்டர் கெங்காதரம் மாணவ மாணவிகளுக்கு தனித்தனியாக அழைப்பு அனுப்பியிருந்தார்.

யாழ்ப்பாணம் றிம்மர் மண்டபத்திற்கு நேற்று பிற்பகல் 2 மணிக்கு வருமாறும் பெற்றோரையும் தவறாது அழைத்து வருமாறும் அந்த அழைப்பில் கூறப்பட்டிருந்தது.

நண்பகல் 1 மணிக்கே மாணவரும் பெற்றோரும் வரஆரம்பித்தனர். பிற்பகல் 4 மணி வரை காத்திருந்தனர். அதுவரை ஆணையாளரும் வரவில்லை; கல்லூரி நிர்வாக அதிகாரி டாக்டர் கெங்காதரமும் சமுகமளிக்கவில்லை. அந்த அழைப்பின் பின்பக்கத்தில் கட்டாயம் வரவும் என்றும் குறிப்பிட்டிருந்தது.

4 மணிவரை காத்திருந்த மாணவர்களும், பெற்றோர்களும், ஏமாற்றத்துட[illegible] திரும்பிச்செல்ல ஆரம்பித்தனர். (க)

# காங்கேசன்துறை தொகுதியில் கம்யூனிஸ்ட் போட்டியிடுமா?

## கூட்டணி உதவியுடன் தமிழ் ஈழ கம்யூ.கட்சி தோன்றுமா?

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாவட்டத்தில் அடுத்த தேர்தலில் போட்டியிடுவதில்லை என்ற யாழ்.மாவட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் தீர்மானத்தை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப்பீடம் ஏற்றுக்கொள்ளாத பட்சத்தில், காங்கேசன்துறைத் தொகுதிக்கு திரு. வி. பொன்னம்பலம், கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நிறுத்தப்படலாம் என அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

கம்யூனிஸ்ட் கட்சித் தலைமைப்பீடம் திரு. வி. பொன்னம்பலத்தை நிறுத்தும் பட்சத்தில் அவர் காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிடுவார் எனக் கூறப்படுகிறது. தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்குமிடையிலான இணக்கம் மேதின விழாவில் ஏற்பட்ட பாச்[illegible]யைத் தொடர்ந்து ஸ்தம்பித நிலையிலுள்ளதால், கம்யூனிஸ்ட்கட்சி, காங்கேசன்துறையில் அபேட்சகரைநிறுத்துவதற்கான சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றன.

இதேசமயம் கம்யூனிஸ்ட் கட்சி திரு. வி. பொன்னம்பலத்தை காங்கேசன் துறையில் நிறுத்தும்பட்சத்தில் கூட்டணி

(6-ம் பக்கம் பார்க்க)

### வேலரும் மயிலரும்



வேலர்:- நானும் ஒருக்கா தேர்தலில் நிக்கலாம் எண்டு பார்க்கிறன்.

மயிலர்:- அப்ப ஆயிரம் 'அவுட்' தான்.

வேலர்:- இல்லையப்பா நான் ஆயிரம் கட்டுகிறது. என்னை விளம்பரப்படுத்துகிறதுக்கு தேர்தல் முடிய ஒரு பிசினஸ் துவங்கலாம் எண்டு பாக்கிறன்.

— சுந்தர்.



### அரங்கேற்றம்

சதங்கை நர்த்தனாலய மாணவி, திருமதி லீலா ஆறுமுகையாவின் சிஷ்யை, செல்வி வானதி இலங்கேஸ்வரனின் பரத நாட்டிய அரங்கேற்றம் இன்றுமாலை யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிபர் திரு. பொ. ச. குமாரசுவாமி தலைமையில் நடைபெற இருக்கிறது. செல்வி வானதியின் 'பக்தமீரா' நடனத்தோற்றத்தை மேலேயுள்ள படம் சித்திரிக்கிறது.

9 மாநில அரசு கலைப்பு விவகாரம்

## தலைமை நீதிபதியை ஜனாதிபதி சந்தித்தார்

### சுப்ரீம் கோர்ட் நீதிபதி அதிர்ச்சித் தகவல்

புதுடில்லி, மே 6

9 காங்கிரஸ் மாநில அரசுகளைக் கலைக்கும் விவகாரம் குறித்த சுப்ரீம்கோர்ட்டின் தீர்ப்பு வெளிவருமுன் தற்காலிக ஜனாதிபதி திரு. ஜட்டி சுப்ரீம்கோர்ட்டின் தலைமை நீதிபதியைச் சந்தித்தார் என்ற தகவலை சட்டசபை கலைப்பு விவகாரம் குறித்து விசாரணைசெய்த 7 சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளில் ஒருவரான திரு. வீராசாமி இன்று சுப்ரீம்கோர்ட்டில் தெரிவித்தார்.

இச்சந்திப்பு குறித்து கவலை தெரிவித்த நீதிபதி தமக்கு இது பற்றி நீதிமன்றத்தில் கூற விருப்பமில்லை என்றும் எந்த வித சக்திக்கும் அப்பாற்பட்ட உயர்ந்த பதவியிலிருக்கும் ஒரு ஜனாதிபதி இவ்வாறு தவறாக நடந்துள்ளமையால் இது போன்று மீண்டும் ஒருமுறை எவரும்நடந்துகொள்ளக்கூடாதென்பதற்காகவேதாம் இதை நீதிமன்றத்தில் வெளியிடுவதாகவும் அந்த நீதிபதி தெரிவித்தார்.

நீதிபதி இதுபற்றி நீதிமன்றத்தில் கூறியபோது அங்கு நிசப்தம் நிலவியது.

9 மாநில சட்டசபைகள் கலைப்பு விவகாரம் குறித்த

(-6ம் பக்கம் பார்க்க)

## வி. என். நவம் மீண்டும் தேர்தலில் நிற்பார்!

யாழ்ப்பாணம், சனி

இம்முறை தேர்தலில் போட்டியிடுவதில்லையென்று கூட்டணியின் தலைமைப்பீடத்துக்குத் தெரிவித்திருந்த சாவகச்சேரிப் பிரதிநிதி திரு வி. என். நவரத்தினத்தைக் கூட்டணிப் பிரமுகர்களும் சாவகச்சேரித் தொகுதியைச் சேர்ந்த பலரும் சென்று தந்தை செல்வாவின் மறைவுக்குப் பின் திரு. அமிர்தலிங்கம், திரு. சிவசிதம்பரம் ஆகியோரின் கருத்தை வலுப்படுத்துவதற்காகவும் தமிழர் விடுதலைக்கூட்டணியின் ஒற்றுமையைக் கட்டிக் காப்பதற்காகவும் மீண்டும் தேர்தலில் நிற்கவேண்டுமென்று வற்புறுத்தினர்.

இதை ஏற்றுக்கொண்ட திரு. வி. என். நவரத்தினம் மீண்டும் தேர்தலில் நிற்பதற்குச் சம்மதித்துள்ளாரெனத் தெரியவருகிறது.



## படகோட்டி உட்பட நால்வருக்கு றிமாண்ட்

மாத்தறை, வெள்ளி

நில்வள கங்கை படகுவிபத்துச் சம்பவம் தொடர்பாக மாத்தறை நீதிபதியின் உத்தரவின் பேரில் படகோட்டியும் மற்றும் உதவியாளர் மூவரும் இம்மாதம் 9-ம்திகதி வரை றிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்தில் இறந்தோரில் இதுவரை 22 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

இவற்றில் சில சடலங்கள் ஆற்றோரத்தில் மிதந்ததாக பொலிசார் தெரிவித்தனர்.

சாட்சிகளின்படி இன்னமும் 10 பேரின் சடலங்கள் மீட்கப்பட வேண்டியுள்ளன எனத் தெரியவருகிறது. (உ)

### மணிவாக்கு

ஒரு பிரமாணத்தை மீறுவது ஏனைப் பிரமாணங்களையும் மீறச் செய்வதற்கு இன்னும் வழிகோலுமென்பதற்கு ஐயமில்லை.

—காந்திமகான்

ஈழநாடு
THE EELANAADU

# நகர மண்டபமா படமாளிகையா?

'ஒட்டகத்துக்கு இடம் கொடுத்த அராபியனின் கதை' மாதிரி படமாளிகைக்கு நகரமண்டபத்தைக் கொடுத்துவிட்டு மாநகர சபை திண்டாடுகிறதென்றே சொல்லவேண்டும்.

நகரமண்டபம் கட்டுவது நகரத்துக்குப் பெருமைக்காக மட்டுமல்ல பொதுமக்களின் வசதிக்காகவும் தான் என்பதை மறந்துவிடக்கூடாது.

வெளிநாட்டுத் தலைவர்கள் பலர் யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்திருக்கிறார்கள்.

அவர்களுக்கு யாழ்ப்பாண மக்கள்சார்பில் யாழ்ப்பாண மாநகரசபை பொதுவரவேற்பளித்து அவர்களைக் கௌரவித்ததுடன் யாழ். நகரத்துக்கும் பெருமை தேடிக் கொடுத்திருக்கிறது.

நகரமண்டபத்தில் நடைபெறும் எந்தஒரு நிகழ்ச்சியும் நகரமக்களுக்குப் பெருமை தருவதாகும்.

இவை தவிர யாழ்ப்பாண நகரில் இப்போது வீரசிங்கம் மண்டபம் ஒன்றைத் தவிர பொதுநிகழ்ச்சிகள் வைக்கக்கூடிய வசதியான மண்டபம் வேறு எதுவும் இல்லை.

வீரசிங்கம் மண்டபத்தில் சில நிகழ்ச்சிகள் நடத்துவதற்குக் கொழும்பில்தான் அனுமதிபெறவேண்டும்.

இந்தமண்டபத்தைப் பயன்படுத்துவதற்குச் செலுத்தவேண்டியகட்டணமும், நகரமண்டபத்துக்குச் செலுத்தும் கட்டணத்தைவிட அதிகம்.

சமீபத்தில் இரண்டு தமிழ்ப்பெரும் தலைவர்கள் மறைந்தார்கள்.

அவர்களுடைய பூதவுடல்களுக்குப் பெருந்தொகையான மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள்.

வீரசிங்கம் மண்டபத்தில்தான் பொதுமக்கள் அஞ்சலி செலுத்தவேண்டியிருந்தது.

இது யாழ்ப்பாண நகருக்கோ, மக்களுக்கோ அல்லது மறைந்தவர்களுக்கோ பெருமையளிப்பதல்ல.

மறைந்த தலைவர்களுக்குப் பொதுமக்கள் அஞ்சலி செலுத்துவதென்பது அவர்களுக்கு ராஜமரியாதை செலுத்துவதற்கு ஒப்பானது.

யாழ்ப்பாண நகரமண்டபத்தில பொதுமக்கள் அஞ்சலி செலுத்துகிறார்கள் என்று சொல்லும்போது யாழ்ப்பாண நகரம், மட்டுமல்ல ஈழத் தமிழர்களின் தலைநகரமே அஞ்சலிசெலுத்துவதாகும்.

யாழ்ப்பாண நகர மண்டபத்தைப் படமாளிகைக்கு வாடகைக்குக் கொடுக்க முடிவுசெய்யப்பட்ட போது அப்போது மாநகரசபையில் அங்கம்வகித்த பலரும் பொதுமக்களும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

புதிய படமாளிகை கட்டப்பட்டதும் நகரமண்டபத்தை அவர்கள் காலி செய்து விடுவார்களென்றும் இது ஒரு தற்காலிக ஏற்பாடுதான் என்றும் அச்சமயம் பதிலளிக்கப்பட்டது.

பின்னர் மாநகரசபை கலைக்கப்பட்டுவிட்டது.

நகரில் எத்தனையோ படமாளிகைகளிருக்கின்றன. இன்னும் புதிய படமாளிகைகளும் விரைவில்தோன்றலாம்.

ஆனல் பொதுமக்களின் வசதிக்காக பொதுநிகழ்ச்சிகள் நடத்துவதற்கு எத்தனை மண்டபங்களிருக்கின்றன?

யாழ். நகர மண்டபம் பொதுமக்களின் வசதிக்காகப் பொதுமக்களின் வரிப்பணத்தில் உருவாக்கப்பட்டுப் பேணப்படுவது.

சமீபத்திய நிகழ்ச்சிகளை எடுத்துக்காட்டாக வைத்தாவது திரைப்படக்காரர்களை அங்கிருந்து அகற்றிவிட்டு நகர மண்டபத்தை பொதுமக்களின் வசதிக்காக நகர மண்டபமாக உபயோகிப்பதற்கு உள்ளூராட்சி அமைச்சு தாமதமின்றி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

நகர மண்டபம் நகர மண்டபமாகவே இருக்கட்டும். படமாளிகையாக அது இருக்கவேண்டிய அவசியமில்லை.

## தந்தை செல்வா நினைவாலயம்:

# அறங்காவலர்குழு காணியை பார்வையிட்டது

அரியாலை, வெள்ளி

மூதறிஞர் தந்தை செல்வாவிற்கு நினைவாலயம் கட்டுவதற்கு அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டுள்ள காணிக்கு விஜயம் செய்த நினைவாலய அறக்காவல் குழுத் தலைவர் திரு. கு. நேசையா கோஷ்டியினர் நினைவாலய அமைப்புப் பற்றியும் ஆராய்ந்தனர்.

திரு. கு.நேசையா தலைமையில் செயலாளர் திரு.அ.அமிர்தலிங்கம் பொருளாளர் திரு. சி.கதிரவேலுப்பிள்ளை எம்.பி யாழ். மாஜி உதவி மேயர் திரு.நா. செல்லத்துரை ஆகியோரும் இளைஞர் பேரவை உறுப்பினரும் இக்கோஷ்டியில் இடம்பெற்றனர்.

(உ)

## இடமாற்றம்

வேலணை,வெள்ளி

மட்டக்களப்பு திருக்கோவிலில் பொதுசுகாதார பரிசோதகராகக் கடமையாற்றிய திரு.கே.சிவலிங்கம் வேலணைப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(உ)

# 'இந்தியர்போற்றும்ஈழத்தவர் கவின்கலைப்பாண்டித்தியம்'

— பரமாசாரிய சுவாமிகள்

யாழ்ப்பாணம், சனி

'கவின்கலைகளில் இலங்கைத் தமிழர் அடைந்துள்ள பாண்டித்தியமும் பேரும் சிறப்பும் இந்தியநாட்டினராலும் பாராட்டிப் போற்றப்பட்டது. எனவே கல்வி, கலை, பண்பாட்டினை நன்கு வளர்ப்பதற்கு தனியான ஒரு கலைக்கூடம் அமைக்க இக்கழகம் எடுக்கும் முயற்சி முழுமை பெற்று மென்மேலும் கழகம் சிறப்படைய வாழ்த்துகிறேன்' என்று ஞானசம்பந்தபரமாசாரிய சுவாமிகள் நல்லை ஞானசம்பந்தர் ஆதினமண்டபத்தில் திரு ஆ.துரைராஜசிங்கம் தலைமையில் நடைபெற்ற இலங்கை கல்வி, கலை, பண்பாட்டுக் கழகத்தின் 7வது ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அருட் திரு. தனிநாயகம் அடிகளார் பேசுகையில், 'தமிழர்கள் தமது தமிழ்க் கல்வி, கலைகள் மேன்மேலும் வளர்க்கபாடுபடவேண்டும். இத்தகைய பெரும் தொண்டில் ஈடுபாடு கொண்டு உழைத்துவரும் இக்கழகம் சகலவழிகளிலும் சிறப்படைய இறையருள் கிடைப்பதாக' என்றார்.

இக்கழகத்தின் புதிய ஆட்சிக்குழுவின் புதிய தலைவராகத் தெரிவுசெய்யப்பெற்ற சட்டத்தரணி திரு.த. சோமசுந்தரம் பேசுகையில், 'காப்புக்கழகத்தின் செயலகக் கட்டிடம் ஒன்றை வரும் ஆவணித் திங்களில் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்போவதாக'க்கூறினார்.

கழகப் பொதுச்செயலாளர் ஓவியர் திரு. ச. பெனடிக்ற் நன்றியுரை கூறினார். (உ)

# "லட்சியம் நிறைவேற தலைவரின் ஆன்மபலம் உதவட்டும்"

## முற்போக்கு எழுத்தாளர் சங்கம் அறிக்கை

'தமிழ்மக்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் கோட்பாடுகளான தமிழ் மக்களின் சுயநிர்ணயஉரிமை, தனித்துவம், இனங்களுக்கும் மொழிகளுக்குமிடையிலான சமத்துவம் போன்றவை எமது சித்தாந்த நிலைப்பாட்டுக்கு முற்றிலும் ஏற்றவையாகும். ஒரு ஜனநாயக, ஐக்கிய ஈழத்தில் தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் ராஜ்யத்துவத்தையும் அடைய வழி சமைக்க உதவும் அடிப்படையில் ஒருஜனநாயகத தீர்வு காணப்படுவதற்கு மறைந்த தலைவரின் ஆன்மபலம் உதவட்டும்'.

மேற்கண்டவாறு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கம் மூதறிஞர் மறைவுகுறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. அவ்வறிக்கை வருமாறு:

'தமிழ்மக்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகத்தின் மறைவு குறித்து இ. மு. எ. ச. தமிழ் மக்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்வதுடன் தமிழினத்தின் சோகத்திலும் பங்கு கொள்கிறது.

'மறைந்த தலைவரின் அரசியல் பார்வையுடன் இ. மு. எ. ச. பல இடங்களில் உடன்படாவிட்டாலும் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை, தனித்துவம், இனங்களுக்கும் மொழிகளுக்கிடையிலான சமத்துவம் என்ற அவரது கோட்பாடுகள் எமது சித்தாந்த நிலைபாட்டிற்கு முற்றிலும் ஏற்றவையாகும்,

'இந்த சித்தாந்த நிலையையும் தமிழ்மக்களின் ஜீவாதாரமான உரிமைகளையும் அங்கீகரிப்பதன் அடிப்படையில் தேசிய இனப்பிரச்னைக்கு ஒரு ஜனநாயகத்தீர்வு காணவேண்டும் என்று தேசிய ஒருமைப்பாட்டுக்கான எழுத்தாளர் மாநாடு துவக்கிவைத்த நிகழ்வுப்போக்கு நிர்ணயமான ஒரு காலகட்டத்திற்குவந்துகொண்டிருக்கும் ஒரு காலப் பகுதியில் திரு. எஸ். ஜே. வி. அவர்களின் மறைவு ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும்.

'ஒருஜனநாயக ஐக்கிய ஈழத்தில் தமிழ் இனத்தின் சுயநிர்ணய உரிமையையும், ராஜ்யத்துவத்தையும் அடைய வழி சமைக்க உதவும் அடிப்படையில் ஒருஜனநாயகத்தீர்வு காணப்படுவதற்கு, மறைந்த தலைவரின் ஆன்மபலம் உதவட்டும்'. (அ)

### "தமிழினத்தின் முழுமதி"

"முகிழ்த்தெழும் தமிழினத்தின் முழுமதியாகத் திகழ்ந்த இணையற்ற தலைவர் தந்தை செல்வாவின் மறைவு சொல்லில் வடித்திட இயலா துயரம் தருவது" என்று குப்பிழான் மக்கள் பொதுப்பணி மன்றத்தின்சார்பில் மன்றப் பொதுச் செயலாளர் திரு. பொ. நடனசிகாமணி, தந்தை செல்வாவின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள அனுதாபச்செய்தியில் தெரிவித்துள்ளார்.

"ஏழாலை, புன்னாலைக்கட்டுவன், மயிலிட்டி தெற்கு, கட்டுவன் ஆகிய பலகிராமசேவையாளர் பிரிவுகளின்கீழ் செயற்படவேண்டியிருந்த குப்பிழான் கிராமத்தை தனித்துவம் மிக்க ஒரு கிராமமாக்கித்தந்த தனிச்சிறப்பு தந்தை செல்வாவையே சாரும். இந்த நன்றிக்கடன் நெஞ்சிருக்கும்வரை எம் ஊர் மக்கள் நினைவில் நிலைத்து நிற்கும் என்பதில் சந்தேகமில்லை' என்று இந்த அனுதாபச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது.

### மீகாமன் இல்லாத மரக்கலமானோம்

'தந்தை செல்வா ஆசிரியஉலகில் பின்தங்கியிருந்த தோட்டப்பாடசாலை ஆசிரியர்களுக்கு அளப்பரிய சேவையாற்றினார். அவர்கள்வாழ்வின் முன்னேற்றத்திற்கு உதவினார். இன்று தமிழ்ச்சிறும் தமிழ் ஆசிரியர்களும் மீகாமன்இல்லாத மரக்கலம்போலானோம். அவர்காட்டிய வழி நடந்து அன்னார் ஆத்மா சாந்திபெறச் செய்வோம்'.

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சேவைச்சங்கம் சார்பில் அதன் செயலாளர் திரு. இ. சுப்பிரமணியம் விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (அ)

### தந்தைக்கு கி. மு. சங்கம் மௌனஞ்சலி

வேலணை கிழக்கு கிராமமுன்னேற்றச்சங்கம் மூதறிஞர் தந்தை செல்வாவின் மறைவு குறித்து இரு நிமிட நேர மௌனஞ்சலி செலுத்தியது.

சங்கத்தலைவர் திரு. ஆ. கேதாரநாதன் தலைமையில் நடைபெற்ற நிர்வாகசபைக் கூட்டத்தில் மேற்படி அஞ்சலி செலுத்தப்பட்டது.

### பாடசாலை அதிபர்களும் அஞ்சலி

ஊர்காவற்றுறைத் தொகுதி பாடசாலைகளின் அதிபர்கள் சங்கம் வேலணை சரஸ்வதி மகாவித்தியாலயத்தில் தலைவர் திரு. வீ. நல்லதம்பி தலைமையில் கூடி தந்தை செல்வாவுக்கு மௌனஞ்சலி செலுத்தியது. (உ)

## மே 1 முதல் ஒரு வாரம் துக்கம்

மட்டுநகர், வெள்ளி

தந்தை செல்வாவின் மறைவு குறித்து முஸ்லிம் ஐக்கிய முன்னணியின் கல்முனைத் தொகுதியில் நடாத்தவிருந்த மேதின நிகழ்ச்சிகள் உட்பட சகல வைபவங்களையும் ரத்து செய்துவிட்டு, மே மாதம் முதலாவது வாரத்தைத் துக்கவாரமாக அனுஷ்டிப்பதென 27ம் திகதி காலை அவசரமாகக் கூட்டப்பட்ட மேற்படி செயற்குழு தீர்மானித்து அறிவித்தது.

தமிழ் பேசும் மக்களின் ஒற்றுமையைக் கட்டி எழுப்புவதே தந்தையின் இலட்சியத்தை அடைய அன்னருக்கு நாம் செய்யும் கைமாறாகும் என முஸ்லிம் ஐக்கிய முன்னணிப் பொதுச் செயலாளர் ஜனாப் எம். எஸ். சம்சுதீன் விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். [அ]

## நல்லூர் ஜனசக்தி ச.ச.நிலைய ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், சனி

நல்லூர் அரசடி ஜனசக்தி சனசமூக நிலையத்தின் 29 வது ஆண்டு நிறைவு விழா நேற்று ஆரம்பமாகியது. இவ்விழா ஞாயிற்றுக் கிழமைவரைநடைபெறுகின்றது.

நேற்று நிலையத் தலைவர் திரு. பொ. முத்துலிங்கம் தலைமையில் மரதன் ஓட்டப் போட்டியும் விளையாட்டுப் போட்டிகளும் இடம்பெற்றன.

இன்று திரு.சி.சின்னராசா தலைமையில் 10 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டியும் வினோத உடைப்போட்டியும் ஏனைய விளையாட்டுப் போட்டியும் இடம் பெறும்,

ஞாயிற்றுக்கிழமை வட பகுதித தேர்தலதிகாரி திரு. இ. யோகநாதன் தலைமையில் பல கலைநிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன, இக்கலை நிகழ்சிகளுக்கு பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. க. சிவஞானம் கலந்து கொள்வார். உ-க)

## சட்ட நடவடிக்கை

வேலணை,வெள்ளி

வேலணை கிராமசபை தனது எல்லைக்குள் சோலைவரி கட்டாதோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளது. (உ)

சட்டசபைத் தேர்தல்களை

## துணிவுடன் எதிர்நோக்க காங்கிரஸார் கங்கணம்

புதுடில்லி, மே 6

அகில பாரத காங்கிரஸ் காரியக் கமிட்டியின் கூட்டம் நேற்று புதுடில்லியில் ஆரம்பமாகியது.

எதிர்வரும் சட்ட சபைத் தேர்தல்களைத் துணிவுடன் எதிர்நோக்குவதெனக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

லோக்சபா தேர்தலில் காங்கிரஸுக்கு கிடைத்த தோல்வி குறித்து ஆழ்ந்த கவலை தெரிவிக்கப்பட்டது.

நெருக்கடிநிலை அமுலின் போது ஏற்பட்ட துரதிர்ஷ்டவசமான சில சம்பவங்கள் குறித்தும் ஆராயப்பட்டது.

இவ்வித சம்பவங்களில் ஈடுபட்ட காங்கிரஸார் அதற்கானவிளைவுகளை அனுபவித்தே தீரவேண்டும் என்று மற்ெறாரு தீர்மானம் கூறுகிறது. லோக்சபா தேர்தலையடுத்து நடைபெறும் கட்சியின் முதல் கூட்டத் தொடர் இதுவாகும்.

இன்று நடைபெறும் தலைவர் தேர்தலில் திரு. சித்தார்த்த சங்கர்ராயுக்கும், திரு. பிரமானந்தரெட்டிக்கும் இடையே போட்டியிருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னாள் ஆந்திர முதலமைச்சர் திரு. நரசிம்மராவும் தலைவர் தேர்தலில் போட்டியிடக்கூடும் என பேச்சடிபடுகிறது. (உ)

# 'ஆட்சிமன்றத்தை கலைத்து ஒரு மாதத்தில் தேர்தல்!'

## பூட்டோவுக்கு எதிர்க்கட்சிகள் வலியுறுத்து

இஸ்லாமாபாத், மே 6

பாகிஸ்தானில் நிலவும் நெருக்கடிநிலை நீங்கவேண்டுமானால் பாகிஸ்தான் அரசாங்கம் செய்யவேண்டியது என்ன என்பது குறித்து பாகிஸ்தான் எதிர்க்கட்சி தேசியக் கூட்டணி பிரதமர் சுல்பிகார் அலிபூட்டோவிடம் சமர்ப்பித்துள்ள ஆலோசனைகளில் சிலநிபந்தனைகளை விதித்துள்ளது.

பாகிஸ்தானில் இராணுவச் சட்டம் நீக்கப்படுவதுடன பத்திரிகைத் தணிக்கை ரத்துச் செய்யப்படவேண்டும் என்பது எதிர்க்கட்சிக் கூட்டணி விதித்துள்ள நிபந்தனைகளில் ஒன்ருகும்.

### 30 நாட்களில் தேர்தல்

அத்துடன் பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலும் உள்ளூராட்சிமன்றத்தேர்தல்களும் 30 நாட்களுக்குள் நடத்தப்படவேண்டும் என்பது அடுத்த நிபந்தனையாகும்.

பாராளுமன்றம் கலைக்கப்படும் அதேவேளை பிரதமர் பூட்டோவும் தம் பதவியை ராஜிமாச்செய்துவிடவேண்டும் என இந்த நிபந்தனையில் கூறப்பட்டுள்ளது. (உ)

ஜெயப் பிரகாஷ்

## அபாயகட்டத்தைதாண்டினர் குடும்ப டாக்டர் தகவல்

வாஷிங்டன், மே 6

ஜெயப்பிரகாஷ் நாராயணின் உடல்நிலை திருப்திகரமாக இருப்பதாகவும் அவர் சத்திரசிகிச்சையின்பின்இருந்த 48 மணி நேர அபாய கட்டத்தைக்கடந்துவிட்டார் என்றும் அவரது குடும்ப டாக்டரான மணி தெரிவித்துள்ளார்.

இன்னமும் ஒருவாரம்வரை திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் தற்போது அமெரிக்காவில் சத்திர சிகிச்சைபெற்ற மருத்துவமனையில் தங்கியிருப்பார் எனத் தெரிகிறது. [உ]

## 26 பேர் கைது

பண்டாரவளை, வெள்ளி

சிறிமா–சாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் தாயகம் செல்லாது தலைமறைவாகத் திரிந்தவர்கள் எனக்கூறப்படும் 26பேர் அப்புத்தளை,பண்டாரவளைப் பகுதிகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களினது குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் 100 பேர் வரை எனத்தெரிவிக்கப்பட்டது.

இவர்களைத் தாயகம் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளில். குடிவரவு குடியகல்வு திணைக்களம் ஈடுபட்டுள்ளது. (உ)

## நேர்முகப் பரீட்சையில் பங்கீட்டுப் புத்தகங்கள்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நடைபெற்ற ஆசிரிய நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சாத்திகளுக்குத் தர்மசங்கடமான நிலை ஏற்பட்டதாம்.

பரீட்சாத்திகளிடம் தமதுவசிப்பிடம் பற்றியும் பிறப்புஅத்தாட்சிப் பத்திரம் பற்றியும் நேர்முகப் பரீட்சை அதிகாரி வினவியதால் அவர்களது சந்தேகத்தைப் போக்க சகல பரீட்சாத்திகளும் தத்தம் பங்கீட்டுப் புத்தகங்களை எடுத்துச் செல்ல நேரிட்டதாம்.

அப்பாயிருந்தும்கூட சில அதிகாரிகளின் சந்தேகம் திராததாக இருந்தது என்று கூறப்படுகிறது.

இதேவேளை ஆசிரிய நியமனங்களுக்கான நேர்முகப் பரீட்சையில் இதற்கு முன் வழங்கப்பெற்ற ஆசிரிய நியமனத்தில் வர்த்தக ஆசிரியராக நியமனம் பெற்றவரும் நயினாதீவைச் சேர்ந்தவருமான எஸ். புவனேந்திரன் என்பவருக்கு மீண்டும் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் நேர்முகப் பரீட்சையில் தீவுப் பகுதி தொகுதியில் ஆசிரியர் பதவிக்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு கிடைத்துள்ளது.

இவர் அண்மையில் தமது கல்வியை தொடர்வதற்காக தமது ஆசிரியர் பதவியை இராஜினுமா செய்தவரென்பது குறிப்பிடத்தக்கது. (கெ-உ)

## பேச்சுவார்த்தை தோற்ருல் பொருளாதாரம்மோசமாகும்

பாரிஸ், மே, 6

பாரிஸில் கைத்தொழில் நாடுகளுக்கும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளுக்கும் இடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் தோல்வி அடையும்பட்சத்தில் உலகப் பொருளாதாரம் மோசமான நிலையை அடையும் என அஞ்சப்படுகிறது.

பேச்சுவார்த்தைகளை கைத்தொழில் நாடுகள் அனுவசியமாக நீடித்துக்கொண்டு போகின்றன என்று அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இப்பேச்சுவார்த்தைகள் தோல்வியடையும்பட்சத்தில் உலகப் பொருளாதாரம் மோசமடைவதுடன் கைத்தொழில் நாடுகளுக்கும், அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கும் இடையேயான நட்புறவும் பாதிக்கப்படும் என்று அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

### கார்ட்டர் லண்டனில்

இதேவேளை, அமெரிக்க ஜனதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் லண்டனில் நடைபெறும் பொருளாதார உச்சி மகாநாட்டில் கலந்துகொள்ளும்பொருட்டு லண்டன் சென்றுள்ளார். (உ)

## சீனியால் 27 கோடி ரூபா வருமானம்

கொழும்பு, வெள்ளி

சீனிக்கூட்டுத் தாபனத்திற்கு 27 கோடி 60 லட்சம் ரூபா வெளிநாட்டு நாணயமாற்றுக் கிடைத்துள்ளது.

இந்த வருமானம் 1972–1976 ஆண்டுகளுக்கு இடையில் கிடைத்தது என்று கூட்டுத்தாபன அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது.

இக்கால கட்டத்தில் கல்லோயா, கந்தளாய் தொழிற்சாலைகளில் 72, 000 தொன் சீனி உற்பத்தி செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ)

## ஜூன் 27-ல் யாழ். வளாக கல்வி ஆண்டு ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

இலங்கைப் பல்கலைக்கழக யாழ் வளாகத்தின் புதிய கல்வி ஆண்டு ஜூன் மாதம் 27-ம் திகதி ஆரம்பமாகின்றது.

புதிய மாணவர்களுக்கான ஆரம்ப ஆங்கிலப்பயிற்சி வகுப்புகள் ஒருவாரம் முன்னதாக ஜூன் மாதம் 19-ந் திகதி ஆரம்பமாகும்.

### புதிய பயிற்சிநெறி

யாழ். வளாகத்தில் புதிய கல்வி ஆண்டில் முதல் முறை யாகவணிகவியல்சிறப்புப்பாடநெறி கற்பிக்கப்படவுள்ளது.

தமிழிலும் சிங்களத்திலும் கற்பிக்கப்படும் இந்நெறி இதுவரை வித்தியோதய, பேராதனை வளாகங்களில் மட்டும் இருந்துவந்தது என்றும் இம்முறை யாழ். வளாகத்திலும் வித்தியாலங்கார வளாகத்திலும் முதல்தடவையாக ஆரம்பிக்கப்படவுள்ளது என்றும் யாழ் வளாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ)

வேலையில்லாப் பிரச்னை

# "முற்றுகத் தீர்க்க எந்த அரசாலும் முடியாது"

## பொல்காவலையில் பிரதமர்

பொல்காவெல, வெள்ளி

'ஆரம்பகாலத்தில் அரசியலில் ஈடுபடும்நோக்கம் எனக்கு இருக்கவில்லை. என் கணவர் கொலைசெய்யப்பட்டபின் சுதந்திரக்கட்சியின் தலைமையை ஏற்று வழிநடத்தத் தகுந்தவர்கள் எவரும் இல்லாமையால் நான் தலைமைப்பொறுப்பை ஏற்றேன்' என்று பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா கூறினுர்.

பொல்காவெலப் பகுதியில் நேற்றுப் பல அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்துவைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறிய அவர், 'எமது அரசாங்கத்தைவிட்டுப் பிரிந்து சென்றவர்களுக்கு முன்னர் சுதந்திரக்கட்சி அரசாங்கத்தில் இருந்து பிரிந்து சென்றவர்களுக்கு என்ன கதி ஏற்பட்டதோ, அதேகதிதான் கிடைக்கும்' என்றும் சொன்னுர்.

பிரதமர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

'காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக, சுதந்திரக் கட்சியை வெளிநாட்டு சித்தாந்தங்களின் அடிப்படையில் ஆரம்பிக்கவில்லை. இந்த நாட்டின் மொழி, கலை, கலாச்சாரங்களின் அடிப்படையில் தான் அவர் சுதந்திரக்கட்சியை ஆரம்பித்தார். சுதந்தரக்கட்சி உருவாவதற்கு முன்னரே இருந்து வந்தகட்சிகளிலும்பார்க்க சுதந்திரக்கட்சி மக்கள் மத்தியில் அமோக செல்வாக்குப் பெற்றதற்குக் காரணம் அதன் உறுதியான கொள்கைகள் தான்.

'பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் நாட்டுமக்களுக்குக் கிடைத்த நன்மைகள் அளப்பரியன.

1973-ம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட உணவுற்பத்திப் போர்மூலம் விளைந்த நன்மைகளும் அனந்தம்.

### முற்றுக நீக்கமுடியாத பிரச்னை

நாட்டில் நிலவும் வேலையில்லாத் திண்டாட்டத்தை முற்றுக நீக்கிவிடுவது என்பது எளிதான செயலல்ல. வருடாந்தம் சுமார் 2 லட்சம் மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து வெளியேறுகின்றனர். இவர்களுக்குப் பூரணமாக வேலைவாய்ப்புக் கொடுத்துவிடலாமென்று சாதாரணமாகக் கூறிவிடமுடியாது. அமெரிக்கா, பிரிட்டன் போன்ற செல்வந்த நாடுகளில் கூட வேலையில்லாத்திண்டாட்டம் இருக்கத்தான் செய்கிறது. எந்த அரசாங்கம் பதவிக்குவந்தாலும் இப்பிரச்னையை முற்றுகத் தீர்த்துவிடமுடியாது. ஆயினும் அபிவிருத்தித்திட்டங்கள் மூலம் இப்பிரச்னையை ஓரளவுக்குக் குறைக்க முடியும்.

இன்றைய அரசாங்கம் வேறெந்த அரசாங்கமும் செய்யாத நன்மைகளைச் செய்துள்ளது

1965-70ம் ஆண்டுகளுக்கிடையில் ஆட்சி நடத்தியவர்கள் எந்த உருப்படியான திட்டத்தை அமுல்படுத்தினுர்கள்? அவர்கள் 660 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள்வழங்கினுர்கள். நாம் 36,000 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள் வழங்கினேம்.'

பிரதி அமைச்சர் ஆனந்த சிறிசேன, பொல்காஹவெல எம்.பி. திரு. ஹேரத் உட்பட மற்றும் பலரும் பேசினர்.

## மீன் வியாபாரி வீட்டில் 21,000 ரொக்கம் கொள்ளை

### சுழிபுரத்தில் சம்பவம்

சுழிபுரம், வெள்ளி

மீன்வியாபாரி ஒருவரின் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்த 21,000 ரூபா பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சுழிபுரம் மேற்கில் உள்ள ச. முத்தையா என்பவரதுவீட்டிலேயே இக்கொள்ளை நடந்துள்ளது. சம்பவ தினம் இரவு முத்தையா காதுக்குத்துக் காரணமாக வைத்தியரின் ஆலோசனையின் பேரில் தூக்க மாத்திரைகள் உட்கொண்டிருந்தாராம்.

கூரையைப் பிரித்து வீட்டினுள் இறங்கிய திருடர்கள் அலுமாரியில் இருந்த மேற்படி பணத்தைக்கொள்ளையடித்துக் கொண்டு தப்பிவிட்டனர்.

சங்கானை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறுப்றியால்டீன் இது பற்றிய தீவிர விசாரணை புரிகிறுர். (உ)

## மீண்டும் தீவிரம்

யாழ்ப்பாணம், சனி

யாழ். பொலிசார் யாழ். ஒரு வழிப்பாதைகளில் சட்டத்தை மீறி வாகனங்களைச் செலுத்துவோர் மீது தமது தீவிர கவனத்தைச் செலுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவுமட்டும் இக்குற்றச்சாட்டின்பேரில் 50 பேர் கைதாகினர். [கெ-உ]

## திருவிளையாடற் புராணவிரிவுரை

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் வண்ணை மேற்கு அரசடி விநாயகர்ஆலய அலங்கார உற்சவம் எதிர்வரும் 9-ம் திகதி ஆரம்பமாகிறது.

இவ்வுற்சவத்தை முன்னிட்டு திருவிளையாடற் புராண விரிவுரை 19 ம் திகதிவரை தினசரி இரவு 7 மணிமுதல் 8-30 மணிவரை நடைபெறும்.

நல்லை ஞானசம்பந்த ஆதின குருமகாசந்நிதான ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள் இவ்வுரையை நிகழ்த்துவார்

# வரி விளம்பரம்

## தேவை

நாங்கள் வேப்பம்பூ வாங்கிக்கொண்டிருக்கிறோம். எனவே சேகரிப்போர் எம்மிடம் தொடர்புகொண்டு நியாயமான இலாபம் பெறுங்கள். ஸ்ரீ தாமோதரவிலாஸ், 239, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 6110

புதிய வேப்பம் விதை, இலுப்பம் விதை தேவை. சேகரித்து வைத்திருப்போர் தொடர்புகொள்ளுங்கள். மில்க்வைற் சவர்க்காரத்தொழிலகம், யாழ்ப்பாணம். 6098

## விற்பனைக்கு

இந்துக் கல்லூரிக்கு அருகாமையிலும், புகையிரத நிலையம், கண்டி றோட், தபாற் கந்தோர், சந்தை, ஆஸ்பத்திரி ஆகியவற்றிற்கு அண்மையிலும், வீடுகள் கட்டக்கூடிய 4 பரப்பு, 10 பரப்பு காணிகள் உண்டு. தொடர்பு; வ. சின்னையா, பிரசித்த நொத்தாரிசு, சாவகச்சேரி. 6090

## கல்வி

உயர்கலைக் கல்லூரி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம் (வித்தியா பகுதியினரால் அங்கீகரிக்கப்பட்ட சிரேஷ்ட பாடசாலை) G. C. E. (A/L) H. N. C E கலை, விஞ்ஞானம், வர்த்தகம், இரசாயனம், பௌதிகம், தாவரம், விலங்கியல் முதலியபாடங்களுக்கு செய்கை முறைப் பயிற்சி (Practical) அளிக்கப்படும். G. S. Q. தூயகணிதம், பிரயோக கணிதம், புள்ளிவிபர இயல், இரசாயனம், தாவரம், விலங்கியல் முதலிய பாடங்களுக்கு செய்கைமுறைப் பயிற்சியும் (Practical) அளிக்கப்படும். பதிவாளர் The College of Higher Studies ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 6102

## விற்பனைக்கு

சினைப்பட்டு எட்டரை மாதங்கள் பூரணமாக நிரம்பிய சிறந்த ஐசயர் பசு உடனடி விற்பனைக்குண்டு. தொடர்புகொள்ளவும், 97, பலாலி வீதி கந்தர்மடம், யாழ்ப்பாணம். 6089

## இலங்கைப் பல்கலைக்கழகம்- யாழ்ப்பாண வளாகம்

# கேள்வி அறிவித்தல்

யாழ்ப்பாண வளாகப் பிரதிப் பொருளாளரினால் பின்வரும் சேவைக்காக இலச்சினையிடப்பட்ட கேள்விகள் இணைப்படியில் 1977 05-20ம் திகதி மு. ப. 10-00 மணி வரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

1. வளாக திருநெல்வேலி வளவில் 600 பேர்களுக்கு ஒரு சிற்றுண்டிச் சாலையை நடாத்தல்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''சிற்றுண்டிச்சாலைக்கான கேள்வி'' எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

இதுபற்றிய விபரங்களை வழமையான வேலை நேரங்களில் திருநெல்வேலியிலுள்ள அலுவலகத்தில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளமுடியும். தபால் மூலம் விபரங்களைப் பெற விரும்புபவர்கள் தங்கள் விண்ணப்பத்துடன் சுய முகவரியிடப்பட்ட 15 சத முத்திரை ஒட்டப்பட்ட 9''×4''க்கும் குறையாத அளவுடைய தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

தலைவர்,

இலங்கைப் பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாண வளாகம்,
திருநெல்வேலி.

1977-05-05 6109

## இ. கமலநாதன்,
சட்டத்தரணியும்
நொத்தாரிசும்.

1973-ம் ஆண்டு
44-ம் இலக்க
நீதிநிருவாகச் சட்டத்தின்
283-ம் நிருவாகத்
தத்துவப்பத்திரம்
வழங்குவதற்கான

# இடைக்காலக் கட்டளை

## இலங்கைக் குடியரசின் பகிரங்க நம்பிக்கைப் பொறுப்பாளர் முன்னிலையில்

வலயம்: யாழ்ப்பாணம்

இல: 318

யாழ்ப்பாணம் கந்தர் மடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி இராசையாவின் மரணசாதனம் எழுதப்படாத சொத்துக்கள் காலம் சென்றவர் சம்பந்தப்பட்டவை. இராசையா கைம்பெண் தங்கரத்தினம் இல. 140/4, கந்தப்புராண வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம.
விண்ணப்பகாரி

எதிராக

1. சத்தியசீலன் இராசையா
2. அம்பலவாணர் கைலைநாதனும் பெண்
3. சரஸ்வதி
4. குணலட்சுமி இராசையா
5. தயாநிதி இராசையா
6. கருணாநிதி இராசையா
7. யதார்த்தநாதன் இராசையா
8. அருளாளன் இராசையா
9. யோகலட்சுமி இராசையா

7-ம், 9-ம் எதிர்மனுதாரர்கள் பராயமற்றவர்கள். இவர்கள் அவர்களின் பாதுகாவலர் எதிர்மனுதாரர் இராசையா தயாநிதி மூலமாக வெளிப்படுகிறார்கள்.

1976-ம் ஆண்டு மார்கழி மாதம் 27-ந் திகதி 281-ம் பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பத்தில் முக்கிய உறுதிக்கூற்றுக்கள் முதல்தோற்றத்தில் நிரூபிக்கப்பட்டுள்ளதெனத் திருப்திப்பட்டதின் பேரில் யாழ்ப்பாண நீதி நிருவாகவலயத்தின் தத்துவப்பத்திர அதிகாரி கா. கணபதிப்பிள்ளை ஆகிய நான் வழங்கப்பட்ட அதிகாரத்தின்கீழ் செயல்பட்டு இக்கட்டளையின் அறிவித்தலைப் பெறும் எவராவது அல்லது இந்த நடவடிக்கையில் அக்கறையுள்ள வேறு எவராவது 1977-ம் ஆண்டு மாசி மாதம் 21-ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக தகுந்த காரணம் காட்டி ஆட்சேபம் தெரிவித்தாலன்றி மேற்சொல்லப்பட்ட காலஞ்சென்றவரின் மரணசாதனம் எழுதப்படாத ஆதனங்கள்மீது முறைப்படி வழங்கப்படும் மரணச்சொத்து நிருவாகப்பத்திரத்தை பெறுவதற்கு காலஞ்சென்றவரின் கைம்பெண் என்ற முறையில் மேற்சொல்லப்பட்ட விண்ணப்பகாரியே அருகதையுடையவர் ஆவர் என்றும் அவ்வண்ணமே அவருக்கு மரணச் சொத்து நிருவாகத் தத்துவப் பத்திரம் வழங்கப்படுமென்றும் மேலும் இம்மரணச்சொத்து நடவடிக்கை சம்பந்தமாக 5-ம் எதிர்மனுதாரர் பராயமடையாதவர்களான 7 ம், 9-ம் எதிர்மனுதாரர்களின் பாதுகாவலராகவும் நியமிக்கப் படவிருக்கிறாரெனவும் இத்தால் கட்டளையிடுகிறேன்.
1977-ம் ஆண்டு தை மாதம் 18-ந் திகதி.

கா. கணபதிப்பிள்ளை.

காரணம் காட்டும் திகதி 10-5-77 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கா. கணபதிப்பிள்ளை,
தத்துவப்பத்திர அதிகாரி,
யாழ்ப்பாணம்.

6105

## சுழிபுரம் கிராம சபை

# கேள்வி அறிவித்தல்

1. பண்ணாகம் வீதி அமைத்தல்.
2. பொன்னையா வீதி அமைத்தல்.
3. புளியந்துறை கடற்கரை வீதி அமைத்தல்.
4. மூளாய் அம்மன் கோவிலடி தண்ணீர் தாங்கி
5. பொன்னாலைக் கிணறு வேலைகள்.
6. சுழிபுரம் கி. ச. கிணறு திருத்தம்.
7. சத்தியக்காடு சந்தை கிணறு திருத்தம்.
8. வடக்கம்பரை கலனை வீதி திருத்தம்.
9. 9ம் வட்டார காளி கோவில் வீதி திருத்தம்.

ஆகிய வேலைகளுக்கான கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன. கேள்விப்பத்திரப் பணம் ரூபா 10-00, கேள்விப்பிணைப் பணம் ரூபா 50-00.

மேற்படி கிரயங்களை கட்டி கேள்விப்பத்திரங்களை 16-5-77ம் திகதி பிற்பகல் 3-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் யாவும் பூரணப்படுத்தப்பட்டு 18-5-77ம் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் எமது சபையில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிலோ அல்லது பதிவுத் தபால் மூலமோ எனக்குக் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல்வேண்டும்.

கேள்விப்பத்திரத்தின் ஒரு பிரதி யாழ். பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்படுதல்வேண்டும். இதுபற்றிய மேலதிக விபரங்களை எமது அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

க. ஞானபாஸ்கரன்,
விசேட ஆணையாளர்,
சுழிபுரம் கிராம சபை.

5-5-1977 6108

சீட்டு இல ..........

## பொதுத் தேர்தல் 1977

பொதுமக்கள் நியமனச்சீட்டு

தொகுதி.............. பெயர் ..........
...................... வயது......... அவர்களை நியமிக்க விரும்புகிறேன். 25 சத முத்திரை இத்துடன் அனுப்புகிறேன்.

தொழில்..................
விலாசம்....................
..............................

..............................
(கையொப்பம்)

அனுப்ப வேண்டிய முகவரி:

காரியஸ்தன்
ஈழத்தமிழ்த்தொண்டர்சபை
''மகரலிங்கவாசா'' கீரிமலை

ADVT

# 'சங்கீதஇரத்தினம்' நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம், சனி

இலங்கைப்பல்கலைக்கழக யாழ். வளாக நுண்கலைக் கல்லூரியில் ''சங்கீதரத்தினம்'' பாடநெறிக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சை நேற்று முன்தினம் ஆரம்பமாகி இன்றுவரை சுன்னாகம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியில் நடைபெற்று வருகிறது.

சங்கீதம், பரதநாட்டியம், கதகளி, வயலின், வீணை, மிருதங்கம் ஆகிய நுண்கலைப் பாடநெறிகளுக்கு இவ்வருடம் 66 மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர் என்று வளாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். 160 மாணவர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

இம்மாதம் 16ம் திகதி இவர்களுக்கான புதிய கல்வி ஆண்டு ஆரம்பமாகின்றது என்றும் அவர் தெரிவித்தார். (இ)

## அங்குரார்ப்பணம்

வேலணை, வெள்ளி

வேலணை கிழக்கு கிராம அபிவிருத்தி முன்னேற்றச் சங்கத்தின் அங்குரார்ப்பணக்கூட்டம் வேலணை சரஸ்வதி வித்தியாசாலை மண்டபத்தில் திரு. ஆ. செந்தில்வேல் தலைமையில் நடைபெற்றது. பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் திரு. ஆ. கேதாரநாதன், உபதலைவர் திரு. சி. கார்த்திகேசு, செயலாளர் திரு வ. ஐயாத்துரை, உபசெயலாளர் திரு. இ சற்குருநாதன், பொருளாளர் திரு. சி. முத்துத்தம்பி. பத்துப்பேர் கொண்ட செயற்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது. (உ)

# ஏற்றுமதி - கேள்விப் பத்திரம்

## கேள்விப் பத்திரம் அனுமதித்த திகதியிலிருந்து ஒரு வருட காலத்திற்கு

பின்வரும் இடங்களில் இருந்து மேற்படி சங்கத்திற்கு பொருட்கள் ஏற்றுமதி செய்ய ரெண்டர் கோரப்படுகின்றது. லொறி வைத்திருப்பவர்கள் விண்ணப்பிக்கலாம். மேலும் விபரம் தேவைப்படின் பொது முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும். விண்ணப்பிப்பவர்கள் மேற்படி சங்கத்தால் வெளியிடப்பட்ட படிவத்தில் அனுப்பவேண்டும். விண்ணப்பப் படிவங்கள் இலவசமாக அனுப்பப்படும்.

இடங்கள்:-

1. கொழும்பு
2. யாழ்ப்பாணம்
3. காங்கேசன்துறை
4. பருத்தித்துறை
5. நாவற்குழி
6. திருக்கோணமலை
7. பலாலி

பொதுமுகாமையாளர்.
6107

# WANTED

Kalamazoo Systems Salesmen for immediate training and eugagement to work in Jaffna. Young man under 35 years with sound knowledge of accounts Apply Managing Director, CeylonPrinters Group, P. O. Box 305, Colombo. 6111

## விவசாயிகள் மகிழ்ச்சி

பண்டத்தரிப்பு, வெள்ளி

நீண்டகால வரட்சிக்குப் பின்னர் பண்டத்தரிப்பு, சில்லாலை, மாகசுல் பகுதிகளில் பலத்த மழை பெய்துள்ளது.

இம்மழையினால் மிளகாய்ச் செடிகளில் ஏற்பட்ட பலவித மான நோய்களும் ஓரளவு குறைந்து அதிக செழிப்புடன் வளரமுடியும் என்று இப்பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். (அ)

## வாலிபர் கொலை

கொழும்பு, வெள்ளி

அளவை பொலிஸ் பகுதியில் உள்ள குடியேற்றத்திட்டத்தில் வசித்துவந்த முதியான்சலாகே சோமரத்தின (வயது 22) என்ற வாலிபர் கொலை செய்யப்பட்டு கிணறொன்றில் வீசப்பட்டுக்கிடந்தார்.

கடந்த மாதம் 6ம்-திகதி வீட்டில் இருந்து காணமல் போவதற்கு முன்னர் இவர் ஜெயா என்பவருடன் காணப்பட்டார் என்று பொலிஸ் விசாரணை மூலம் தெரியவருகிறது.

ஜெயா என்பவரை பொலிசார் சந்தேகத்தின் பேரில் தேடி வருகின்றனர். (உ)

## ஆரம்பம்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சோனகதெரு பொம்மைவெளியில் அமைந்துள்ள குடியேற்றத் திட்டத்தை யாழ். எம். பி. திரு. சி. எக்ஸ். மார்ட்டின் நாளை மாலை ஆரம்பித்துவைப்பார். [கா-உ]

## ''தமிழினத்திற்கு துணிவூட்டியவர் மூதறிஞர்'

சுழிபுரம், வெள்ளி

''தந்தை மூதறிஞர் செல்வா ஈழத் தமிழினத்துக்கு துணிவையும், வீரத்தையும், நம்பிக்கையையும் ஊட்டி சாதி, மத, பிரதேச வேறுபாடுகளை களைந்தெறிந்து பரிசுத்தமான இதயத்துடன் நேர்மை ஒன்றையே தன்னுடைய இராச தந்திரமாகக் கொண்டு மாற்றுரும் போற்றுகின்ற மகோன்னத நிலையை அடைந்து தமிழ்ப் பேசும் மக்களுக்கென மாற்றமுடியாத இறுதி இலட்சியமான 'சுதந்திரத் தமிழ் ஈழத்தை' உருவாக்க உழைத்தார்'' என்று இலங்கை சட்டக் கல்லூரி இந்து மகாசபைத் தலைவர் திரு. இ. தவிக்கினராசா, செல்வா மறைவுகுறித்து வெளியிட்டுள்ள இரங்கற் செய்தியில் கூறியுள்ளார்.

அவரது ஆத்மா சாந்தியடைய அவர் உருவாக்கிய ஒற்றுமையை மேலும் காத்து அவர் கண்ட கனவாகிய தமிழீழத்தை அடைய உறுதி பூணுவோம் என்று இச்செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளது. (உ)

## யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர 1978-ம் ஆண்டு பரீட்சைக்கான மீட்டல் வகுப்புகளில் சேர விரும்புவோர் மே மாதம் 10-ந் திகதிக்கு முன்னர் கந்தோரில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.

தொலைபேசி எண்: 617.
376, பிரதான வீதி.
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

அதிபர்.

6103

**REGAL** ஜனத்திரள் நிறைந்த
(JAFFNA) 3-வது வாரம்!

Daily at 4 45, 7-00 & 9-30 p.m. only

அதிசயம்! ஆனல் உண்மை! பார்க்காதவர்கள் பார்க்கத்துடிக்கிறர்கள் பார்த்தவர்கள் பரவசமடைகிறர்கள். உலகெங்கிலும் ஓடி எண்ணற்ற ரசிகர்களின் ஆதரவைப் பெற்று இன்று உங்கள் மத்தியில் காட்சியளித்துக் கொண்டு இருக்கிறது. செக்கஸ் (CIRCUS) இன்னும் சில தினங்கட்கு மட்டும்தான். இன்றே பார்த்து மகிழுங்கள் தவறவிடாதீர்கள்.

For All Good Children From 8 to 80!

"CIRCUS"

(A Full Length Circus Film) (Color)

From 9-5-77 ALFIE DARLING

# யாழ். தொழில் நுட்ப

# மாலைநேரமாணவர் அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், சனி

''மாதாமாதம் கட்டணங்களைச் செலுத்துவதற்குக் கல்விக் கந்தோருக்குச் செல்லும்பொருட்டு லீவு எடுக்க வேண்டிய நிலை எமக்கு ஏற்படுகிறது. இதனல் மாதம் ஒரு நாள் வீதம் என்பது நாள் லீவை வீணுக்க வேண்டியுள்ளது. அத்துடன் எம்மில் சிலர் லீவு வசதியற்றவர்களாகவும் அதனல் சம்பளமற்ற லீவு கொடுக்கவேண்டிய சூழ் நிலையும் ஏற்படுகிறது.

இவ்வாறு யாழ். பல் தொழில் நுட்ப நிறுவன மாலை நேர வகுப்பு மாணவர்கள் நிறுவன அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் கூறியுள்ளனர்.

இம்மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

மாதக்கட்டணத்தை மாதாமாதம் செலுத்துவதுதான் எமக்குச் சுலபமானது. அல்லாமல் நிலுவையாக விட்டுச் செலுத்துவது, வாழ்க்கைச் செலவு உயர்ந்துள்ள இந்நாட்களில் இயலாததொன்ருகும்.

மேலும் பரீட்சைக் காலம் வரை நிலுவையான தொகையினை ஒரே தடவையில் செலுத்துமாறு கல்லூரி நிர்வாகம் வற்புறுத்துவதோடு, அவ்வாறு செய்யத் தவறின் பரீட்சைக்கு அனுமதிக்கத் தடையும் விதித்து விடுகிறது. இப்படியான ஒரு சூழ்நிலை கடந்த வருடம் எம்மில் பலரை பல இன்னல்களுக்கு ஆளாக்கியுள்ளது என்பதை மனவேதனையுடன் தெரிவித்துக்கொள்ளவேண்டியிருக்கிறது.

கல்லூரி நிர்வாகம் கட்டணங்களை கல்லூரியிலேயே செலுத்துவதற்கு வசதியளித்திருக்குமாயின், இப்படியான இன்னல்களை மாணவர்களாகிய நாம் எதிர்நோக்கவேண்டியிருந்திருக்காது. இப்படியான வசதிகளை மாலை 4-30 மணிக்கு முன்பு ஏற்படுத்திக்கொடுப்பதனல் எந்தவிதமான பலனையும் நாம் அடைய முடியாது. தயவுசெய்து இவ்விடயத்தில் நல்ல முடிவைத்தாருங்கள் எனக் கோரப்பட்டுள்ளது. (உ)

ராணி யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
புரட்சித்தலைவர்
∴ எம். ஜி. ஆர் ∴ லதா
(இரு வேடங்களில்)
∴ நிர்மலா ∴ நாகேஷ் ∴ ராஜஸ்ரீ
கஜேந்திரா பிலிம்ஸாரின்

நாளை நமதே

(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி
[மானிப்பாய்]
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி— சௌகார்ஜானகி
பார்மகளேபார்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30, 9-30
சனி ஞாயிறு 10-30
பாலசந்திரன் —சுபாஷினி
பொன்மணி

96-வது வெற்றித் தினம்!
மனோகரா எம்.ஜி.ஆர் - ராதாசலூஜா
வீரப்பா - நிர்மலா
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள் நடித்த

இதயக்கனி

(ஈஸ்ட்மன்கலர்)

மகத்தான 60-வது நாள்
ஸ்ரீதர் ∴ சிவாஜி (இருவேடம்)
(யாழ்ப்பாணம்) ∴ ஜெயலலிதா ∴ சுந்தரராஜன்
தினசரி 4 காட்சிகள் நடித்த

பாட்டும் பரதமும்

(ஈஸ்ட்மன் கலர்)

நாகம்ஸ்
(சுன்னகம்)
தினசரி 6-30, 9-30
சனி ஞாயிறு 2-30
சிவாஜி-ஜெயலலிதா
கலாட்டா
கல்யாணம்

RIO (Jaffna) Daily 4 Shows
HERCULES AGAINST THE BARBARIANS

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
∴ நடிகர் திலகம் சிவாஜி கணேசன் ∴ உஷா நந்தினி
(இரு வேடங்களில்)
∴ சௌகார் ஜானகி, ∴ சுகுமாரி நடித்த
சிவாஜிகணேசன் பெருமையுடன் அளிக்கும்
விஜயவேல் பிலிம்ஸாரின்

மனிதனும்தெய்வமாகலாம்

(ஈஸ்ட்மென் கலர்) டைரக்‌ஷன்: பி. மாதவன் பி. ஏ.

வெலிங்டன் ∴ முத்துராமன் ∴ சுஜாதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 4 காட்சிகள்
வாழ்ந்து காட்டுகிறேன்

லிடோ போன்: 7693 விஜயகுமார் - லதா
[யாழ். நகர்] நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45,
சொர்க்கத்தில் திருமணம்
(கலர்)

வெற்றிவேல்! வீரவேல்! சக்திவேல்!
இது ஞானவேல்! யாவும் நிறைந்த தங்கவேல்!
வருக! வருக! நீ மயிலேறி வருக!

தென்னகத்தில் திரையிடப்பட்ட திரையரங்குகளில் கொட்டகை நிறைந்த காட்சிகளுடன் 100 நாட்களுக்கு மேல் ஓடி வெற்றி முழக்கம் இட்டதே! தேவரின் "திருவருள்"

திருவருளை தேடாத நெஞ்சென்ன நெஞ்சோ
திருவருளை காணுத கண்ணென்ன கண்ணே?

ராஜா- யாழ்நகர் தினசரி 4 காட்சிகள்
நடிப்புச்சுடர்: ஏ. வி. எம். ராஜன்
திருமுருக கிருபானந்தவாரியார், நாகேஷ்,
சுந்தரராஜன, தேங்காய் சீனிவாசன்,
ஜெயா, பேபி இந்திரா நடித்த

∴ தேவரின் எண்ணத்தில் உருவாகிய ஈஸ்ட்மன் வண்ணத்தில் மலர்ந்திருப்பதுதான்!

தேவரின்

திருவருள்

(ஈஸ்ட்மன் கலர்) டைரக்‌ஷன்: ஆர். தியாகராஜன்



இசை:
குன்னக்குடி
வைத்தியநாதன்

கதை-வசனம்-தயாரிப்பு:
சாண்டோ
M.M.A. சின்னப்பா தேவர்

ஈழநாடு
The EELANADU

# "போட்டி கொடித்தினம் நம்பிக்கையைப் பாதிக்கும்"

## கைதடி இ.இ.ம. தலைவர் அறிக்கை

யாழ்ப்பாணம், சனி

இலங்கை இந்து இளைஞர் கொடித்தினம், யாழ்ப்பாணம் இந்து இளைஞர் கொடித்தின வாரம்பற்றிக் கைதடி இந்து மாமன்றத் தலைவரும் அகில இலங்கை சைவஅநாதை இல்ல நற்பொறுப்பாளருமான திரு. ஆ. கந்தையா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

இலங்கையின் பல பாகங்களிலும் சிதறுண்டு கிடந்த அறுபதுக்கு மேற்பட்ட இந்து இளைஞர் மன்றங்களையும், இளைஞர் இயக்கங்களையும் ஒன்றிணைத்து அகில இலங்கை இந்து இளைஞர் பேரவையை உருவாக்கிய பெருமை தற்போதைய தலைமைச் செயலாளர் திரு க. சச்சிதானந்தன் அவர்களையே சாரும். இவ்விளைஞர் இயக்கங்களுக்கு, சட்டதிட்டங்கள், இலச்சினை, பெயர், நோக்கங்கள் யாவும் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற பேரவையின் கருத்தை ஒருமனதுடன் எல்லா மன்றங்களும் ஏற்றுக்கொண்டு சிறப்பாகப் பணிபுரிந்து வருகின்றன. எங்கும், எவரிடமும் கருத்து வேற்றுமைகள் எழுவது இயல்பு. இதற்காக நாம் எதிர்ப்புப்பாதையில்செல்லுதல் கூடாது. பேசித் தீர்த்துக்கொள்ளவேண்டும் அல்லது பெரும்பான்மையோரது கருத்துக்கு மதிப்புக் கொடுக்கவேண்டும்.

திரு. சச்சிதானந்தனின் சேவையை உலகம் அறியும். கடல்கடந்தநாடுகளிலும்எமது மதம் பரவவேண்டும். எமது மதமும் சர்வதேச ரீதியில் மதிப்புப்பெற வேண்டுமென்ற அவாவுடையவர் தனது இலட்சியத்தையடையப் பாடுபடும் பெருந்தகையாளர். அவரின் இலட்சியம் நிறைவுபெற எமது ஆதரவு என்றும் அவருக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இலங்கை இந்து இளைஞர் பேரவையின் கொடித்தினம் 6-5-77ல் நடைபெறப் போவதாக கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னரே தீர்மானிக்கப்பட்ட ஒரு விஷயம். அப்படியிருக்க 5-5-77 தொடக்கம் 12-5-77வரை யாழ். இந்து இளைஞர்மன்றத்தினர் கொடித்தின வாரத்தை நடாத்தப் போவதாகஅறிந்து மிகவே தலையுறுகிறோம். கொடித்தினங்கள் எத்தனையும் நடைபெறலாம். ஒரு காலத்தில் நடாத்தப்படுவது மக்களுக்கு வெறுப்பையும் சந்தேகத்தையும் கொடுக்கும் ஒரு செயலாக இருக்கும். இவ்வாறு நடைபெறுவதை உண்மைத் தொண்டர்கள் எவரும் அங்கீகரிக்கமாட்டார்கள் என நம்புகிறோம். நாம் உதவிசெய்ய விருப்பமில்லாவிட்டால் பேசாமல் இருக்கலாம். நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாதிருக்கவேண்டும். மட்டக்களப்பு, திருக்கோணமலை, வவுனியா, கைதடி மற்றும் பல இளைஞர் இயக்கங்கள் சைவமக்களின் நம்பிக்கைக்குப்பாத்திரமாகிப் பல பணிகளை மேற்கொண்டுவருவதை அனைவரும் அறிவர். ஏனைய மதங்களுக்கு இளைஞர் இயக்கங்கள் எவ்வாறு வலுவுடையதாக அமைந்திருக்கின்றதோ அதைப்போன்று பல இளைஞர் இயக்கங்களை உள்ளடக்கிய இலங்கை இந்து இளைஞர் பேரவை வளர சைவ மக்கள் பெரிதும் துணையாக இருக்கவேண்டுமென விநயத்துடன் வேண்டுகிறேன்.

# வெங்காயம் மிளகாயைத் தாக்கும் புதுவித நோய்

## தடுப்பு மருந்து கிடைக்காமல் யாழ். விவசாயிகள் அவதி

**சங்கானை, வெள்ளி**

**யாழ்ப்பாணப் பகுதியில் முன்னெப்போதுமில்லாதவாறு வெங்காயத்துக்கும் புதுவித புளுநோய் ஏற்பட்டிருக்கிறது.**

இதனால் மிளகாய், வெங்காயம் யாழ் மாவட்டத்தில் பெருமளவில் பாதிக்கப்பட்டிருக்கிறது.

இந்தப் புதிய புழுநோய் மிக வேகமாகப் பரவிவருவதால் இதைக் கட்டுப்படுத்துவதற்கு விவசாயப் பகுதியினர் ''சுமதிலின்'' என்னும் புதிய மருந்தொன்றைப் பாவிக்குமாறு விவசாயிகளுக்குச் சிபார்சு செய்தனர். ஆனால் இந்த மருந்தைப் பெறுவதில் யாழ். மாவட்ட விவசாயிகள் பெரிதும் கஷ்டமடைகின்றனர். இந்த மருந்துவிநியோகம் சீராக இல்லாததால் 75 ரூபாய் பெறுமதியான நான்கு அவுன்ஸ் மருந்து வெளியில் 150 ரூபாய் கொடுத்து வாங்க வேண்டியுள்ளதாக விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர்.

அதிக விலை கொடுத்தும்கூட இந்த மருந்து பெறமுடியாத அளவுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

''சுமதிலின்'' என்ற மருந்தை விவசாயப்பெருக்கக் குழுக்கள் மூலம் விநியோகிக்குப்படியும் அல்லது தட்டுப்பாடின்றி அது கிடைப்பதற்கு வழிசெய்யவேண்டுமென்றும் விவசாயிகள் அரசாங்க அதிபருக்கும் அமைச்சருக்கும் முறையீடு செய்துள்ளனர்.

# மகன் தற்கொலையென்றதும் 5 பிள்ளைகளின் தாயும் தற்கொலை

யாழ்ப்பாணம், சனி

தமது மூத்தமகன் தற்கொலைசெய்துகொண்ட துயரம் தாங்கமுடியாமல் ஐந்து பிள்ளைகளின் தாய் ஒருவர் தாமும் விஷமருந்தித் தற்கொலைசெய்துகொண்டார்.

நெஞ்சையுருக்கும் இசசம்பவம் சுருவிலில் நடைபெற்றுள்ளது.

கந்தையா தனலஷ்மி (வயது 39) என்ற இப்பெண்ணின் மரணம் குறித்து ஊர்காவற்றுறை பகுதி திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. அல்பிட்ர விசாரணை நடத்தினர்.

ஊர்காவற்றுறை பொலிஸ் சார்ஜன்ட் திரு. தர்மலிங்கம் மரண விசாரணைக்கான ஏற்பாட்டைச் செய்திருந்தார்.

காலஞ்சென்றவரின் மூத்த மகன் இருதினங்களுக்குமுன் மனஸ்தாபம் காரணமாக தற்கொலை செய்துகொண்டதால் மனமுடைந்து காணப்பட்ட காலஞ்சென்றவர் சம்பவதினம் விஷமருந்தி தம்துயருக்குமுடிவு கண்டதாக விசாரணையில்தெரிவிக்கப்பட்டது.

தற்கொலை எனத்தீர்ப்பு வழங்கப்பட்டது. (கா-உ)

## துப்பாக்கியுடன் காணப்பட்ட மூவர்

மருதானை, வெள்ளி

துப்பாக்கியுடன் காணப்பட்டதாகக் கூறப்படும் மூவர் மருதானை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

புஹாரி, மொஹிதீன், ஜெயசூரியா என்ற இம் மூவர்பற்றியும் பொலிசார் விசாரணை நடத்துகின்றனர். (உ)

......

## நாளை செல்வா அனுதாபக் கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

அமரர் செல்வாவின் அனுதாபக்கூட்டம் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை வேலணை மண்குபான் பள்ளி வாசலில் நடைபெற உள்ளது.

மண்கும்பான் முஸ்லிம்களால் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ள இக் கூட்டத்தில் இலங்கை வானொலி திருக்குர்ஆன் விரிவுரையாளர் அல்ஹாஜ் என். எம். ஐ. முகம்மது மீரான் முகிதீன் ஆலிம் ஜே. பி. தலைமையில் விசேட பிரார்த்தனை நடைபெறும்.

சட்டத்தரணி ஜனாப் எஸ். எச். ஷஹீட் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் கூட்டணிப் பிரமுகர்களும் வேறு முஸ்லிம் பிரமுகர்களும் உரையாற்றுவார்கள். [இ]

## காங்கேசன்துறை

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

அங்கு போட்டியிடாது, அவருக்கு ஆதரவளிப்பதுபற்றிகூட்டணியில் குறிப்பாக இளைஞர் மத்தியில் கருத்து மோதல் நிலவுவதாகவும் கூறப்படுகிறது.

### புதிய கட்சி உதயமாகுமா?

கம்யூனிஸ்ட்கட்சியின் யாழ்ப்பாணக்கிளையின் சுயாட்சி தீர்மானத்தை கம்யூனிஸ்ட்கட்சி தலைமைப்பீடம் அங்கீகரிக்கப்படாதபட்சத்தில், 'தமிழ் ஈழ கம்யூனிஸ்ட் கட்சி' என்ற புதிய கட்சியொன்றை வடபகுதியில் ஆரம்பிப்பதுடன், அப்புதிய கட்சியை, தமிழர்விடுதலைக் கூட்டணியின் ஓர் அங்கமாகச் சேர்த்து இயங்குவது பற்றிய கருத்துக்களும் கம்யூனிஸ்டுகள் மத்தியில் நிலவுவதாகக் கூறப்படுகிறது.

தமிழ்க்காங்கிரஸ் பொருளாளரும், தமிழர்கூட்டணி பொருளாளருமான திரு. திருநாவுக்கரசுக்கா, முன்னாள் செனட்டர் சு.நடராசாவுக்கா, பேராசிரியர் க வித்தியானந்தனுக்கா காங்கேசன் துறைத் தொகுதியில் கூட்டணி நியமனம்கிடைக்கும்என்பதில் பல சிக்கல்கள் தோன்றியுள்ளன. இதே சமயம் கூட்டணி சார்பில் திரு. எம். சிவசிதம்பரத்தை அங்கு நிறுத்தி இச்சிக்கல்களுக்கு தீர்வு காணவும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

1965-ம் ஆண்டு தேர்தலில் தமிழ்க்காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட திரு. எஸ். ஸ்ரீ பாஸ்கரன் இம்முறை காங்கேசன்துறையில் சுயேச்சையாகப் போட்டியிடஇருப்பதாகவும் கூறப்படுகிறது. (க)

## அனைத்து வளாக தமிழ் சங்கம்

யாழ்ப்பாணம், சனி

அனைத்து வளாக தமிழ் சங்கம் கொழும்பு வளாகத்தில் இன்று காலை 7 மணிக்கு அமைக்கப்படவிருக்கிறது.

## விளையாட்டுப் போட்டி

சுழிபுரம், வெள்ளி

விளையாட்டு அமைச்சின் ஆதரவின் கீழ் வலிகாமம் மேற்கு சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே விளையாட்டுப் போட்டி இன்று சனிச்கிழமை சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பதின்மூன்று விளையாட்டுக் கழகங்கள் போட்டியில் பங்கு கொள்கின்றன.

போட்டியை விக்ரோறியாக் கல்லூரி உப அதிபர் திரு. ஏ. ஸ்பென்சர் ஆரம்பித்து வைப்பார். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு வலிகாமம் மேற்கு உதவிஅரசாங்க அதிபர் திரு. சோ. அருணசலம் பரிசில்களை வழங்குவார்.

## கடலுக்கு வாலிபர் பலியானார்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கல்லூரி வீதியைச் சேர்ந்த ஜீவா என அழைக்கப்படும் 24 வயது இளைஞன் வெள்ளவத்தைக் கடலுக்குப் பலியானார்.

இவரும் இவரது நண்பர்களும் கடலில் குளிக்கப் போனதாகவும் திடீரென இவர் நீர்ச்சுழியில் சிக்கியதாகவும் அதை அடுத்து நீரில் மூழ்கியதாகவும் தெரியவருகின்றது. அன்னாரின் பூதவுடல் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துவரப்பட்டு நேற்று தகனம் செய்யப்பட்டது. (கி)

# வீடு தீக்கிரை

## காரைநகரில் சம்பவம்

யாழ்ப்பாணம், சனி

காரைநகரில் நடைபெற்ற தீவைப்பு சம்பவம் ஒன்று தொடர்பாக பொலிசார் சந்தேகத்தின்பேரில் நால்வரை விசாரணைக்குட்படுத்தியுள்ளனர்.

இந்துமதி என்ற பெண்ணின் வீட்டுக்கே தீவைக்கப்பட்டதாக பொலிஸில் செய்யப்பட்ட புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தலைமை நீதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்ப்புக்கான காரணங்களை வெளியிடுவதற்காக இன்று சுப்ரீம்கோர்ட் கூடியபோதே நீதிபதி மேற்கண்டவாறு கூறினார்.

9 மாநில சட்டசபைகளைக் கலைக்கும் பிரகடனத்தில் தற்காலிக ஜனாதிபதி கடந்த 30-ம் திகதி கையெழுத்திட்டார் என்றும் தலைமை நீதிபதி திரு. பெக்கை அவர் இம் மாதம் 2-ம் திகதியே சந்தித்தார் என்றும் ராஷ்டிரபதி பவன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

### தீர்ப்பின் காரணம்

காங்கிரஸ் படுதோல்வி அடைந்தமாநிலங்களின் சட்டசபைகளின் விவகாரத்தை தீர்க்க சுப்ரீம் கோர்ட்டுக்கு அதிகாரம் கிடையாது என்றும் இவ்விவகாரத்தை நிர்வாகமே தீர்த்து வைக்க வேண்டும் என்றும் இதன் காரணமாகவே மாநில அரசுகளின் மனு நிராகரிக்கப்பட்டதென்றும் இம்மனுவை நிராகரித்த 7 நீதிபதிகளும் ஏகமனதாகக் கருத்து தெரிவித்தனர். [இ]

## குடிநீர் கஷ்டம் தவிர்க்கப்பட்டது

யாழ்ப்பாணம்,.சனி

யாழ். மாநகரசபையின் குடிநீர் விநியோக குழாயில் ஏற்பட்ட பாரிய வெடிப்பு காரணமாக நேற்று மாநகர மக்கள் குடிநீர்பெறுவதில் சிரமத்திற்குள்ளாகினர்.

திருநெல்வேலி சந்திக்கருகாமையில் ஏற்பட்ட இவ் வெடிப்பு காரணமாக பெருமளவில் நீர்வெளியேறியுள்ளது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு க. சிவஞானம் எடுத்த முயற்சியால் வெடிப்பு உள்ள இடம் உடன் கண்டுபிடிக்கப்பட்டு மாநகரசபை நீர்ப்பாசனப்பகுதி ஊழியர்கள் பத்துப் பேர் எம் ஈஸ்வரனின் மேற்பார்வையில் கரிசகதியில் வெடிப்பை ஒட்டும் வேலையில் இறங்கியுள்ளனர். இன்று வெடிப்பு ஒட்டப்பட்டு நீர் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (கு-இ)

அறிவித்தல்

சிமெந்து விநியோகம்

மே மாதம் 9-ம் திகதியிலிருந்து திகதியிடப்பட்ட சிமெந்துப் பெர்மிட்டுக்களுக்குரிய விநியோகம் மறு அறிவித்தல்வரை பிற்போடப்பட்டுள்ளது.

தொழிற்சாலை முகாமையாளர்.
காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை,
காங்கேசன்துறை.
1977-05-06. 6119

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு மே மாதம் 7-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P. O Box 49, Jaffna) Telegram: Eelanaadu. Telephone 389. Registered as Newspaper in Sri Lanka.